### அரியலூர் மாவட்டம் முழுவதும் நாடு போற்றும்

# நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு - சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்: அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு!



அரியலூர்,மே 9 –

அரியலூர் மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் திருச்சி பைபாஸ் சாலையில் உள்ள வாணி மஹால் திருமண மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் கழகச் சட்டத்திட்ட திருத்தக் குழு இணை செயலாளர் சுபா. சந்திரசேகர் தலைமையில் நடைபெறுகிறது.

மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன் முன்னதாக அனைவரையும் வரவேற்று பேசினார். மாவட்ட துணை செயலாளர் லதா பாலு, மாவட் டப் பொருளாளர் கு.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சி.ஆர்.எம். பொய்யா மொழி, ஆர்.எம். அன்பழகன், இரா. பாலு,வி.எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற அரியலூர் மாவட்ட திமுக செயல்வீரர்கள் கூட்டத்தில் அரியலூர் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து,மற்றும் மின்சா ரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கீழ்க்கண்ட தீர்மானங்களை குறித்து சிறப்புரை ஆற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

திராவிட மாடல் அர சின் ஐந்தாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் – மக்களின் மகத்தான பேரன்பைப் பெற்ற – இந்தியாவிற்கே ரோல் மாடலாகச் செயல்படும் கழகத் தலைவர் மற்றும் முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டு.

இந்தியத் துணைக் கண்டத்தில் – மக்கள்நலன் போற்றும் வகையில், மாநில உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் தீரத்துடன், சமூகநீதியைப் பாதுகாத்து, சட்டமன்ற மாண்பினை நிலைநாட்டி, ஜனநாயகக் கோட்பாடு களை உயர்த்திப் பிடிக்கும் அரசாகவும், ஒன்றிய பா.ஜ.க. அரசின் எதேச் சாதி காரப் போக்கிலிருந்து – அரசியல் சட்டம் தந்துள்ள கூட்டாட்சிக் கருத்தியலைப் பாது காக்கும் முதன்மையான மாநில அரசாகவும் நான்கு ஆண்டுகளை நிறைவு செய்து – ஐந்தாவது ஆண்டில் அடியெ டுத்து வைக்கும் திராவிட மாடல் அரசின் – மக்களின் மகத்தான பேரன்பைப் பெற்ற முதலமைச்ச ராகவும் – இந்தியாவிற்கே ரோல் மாடலாக – தமிழ்நாட்டின் தனிப் பெருந்தலை வராகவும் திகழும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் தனது மனமுவந்து வாழ்த்து களைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றத் தில் தீர்மானம் நிறைவேற்றி – ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் தொடர்ந்து குரல் எழுப்பி – சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த வேண்டிய பொறுப்பு ஒன்றிய அரசுக்குத் தான் உள்ளது என்பதை நாட்டு மக்களுக்கும் – ஒன்றிய அரசுக்கும் உணர்த்தி – தற்போது சாதி வாரிக் கணக்கெடுப்பு அறி விப்பைப் பெற்றிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, அரசியல் சட்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாக ஆளுநரின் கையெழுத்தின்றி உச்சநீதிமன்றமே ஒப்புதல் அளித்துச் சட்ட மியற்றும் அதிகாரத்தைத் தனது சட்டப் போரா ட்டம் மூலம் பெற்று, ஆளுநர் அடாவடியாக நிறைவேற்ற மறுத்த பத்து மசோதாக்களைச் சட்ட மாக்கி சகாப்தம் படைத்து, ”சட்டமியற்றும் அதிகாரம் சட்ட மன்றத்திற்கே – ”மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட அரசுக்கே – நிச்ச யமாக ஆளுநருக்கு இல்லை என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க உச்சநீதிமன்றத் தீர்ப்பைப் பெற்று, தமிழ்நாட்டின் உரிமையை நிலை நாட்டியது மட்டுமின்றி, இந்தத் தீர்ப்பின் மூலம், இந்தியக் கூட்டாட்சி வரலாற்றில் அனைத்து மாநிலங் களுக்குமான உரிமைகளைப் பெற்றுத் தந்திருக்கிறார்.

அதோடு, வரலாற்றில் மீண்டும் மாநில சுயாட்சிக்காக மாண்பமை உச்ச நீதிமன்ற நீதியரசர் குரியன் ஜோசப் அவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழுவினை நியமித்துள்ள கழகத் தலைவரும் – முதலமைச்சருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, மாவட்டச் செயலாளர்களின் இந்தக் கூட்டம் உவகையுடனும் – பெருமை பொங்கவும் பாராட்டுதலைப் பதிவு செய்து கொள்கிறது.

மேலும், ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் அவர்களுக்குத் துணையாகச் செயலாற்றி வரும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்; அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் இம்மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் வாழ்த்தும் – பாராட்டும்– நன்றியும் தெரிவித்துக் கொள்கிறது.

”நாடு போற்றும் நான்காண்டு
தொடரட்டும் பல்லாண்டு!
சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள்

முதலமைச்சர் அவர்கள், நடைபெற்று முடிந்த சட்டமன்றக் கூட்டத்தொட ரில், அவரது உள்துறை மானியக் கோரிக்கை மீதான பதிலுரையில் தெரிவித்தபடி, வளர்ச்சி சார்ந்த எந்த ஓர் இலக்காக இருந்தாலும் அதில் இந்திய ஒன்றியத்தின் சராசரியைவிட தமிழ்நாடு கூடுதலான அளவில் முன்னேறியிருக்கிறது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.5 விழுக்காடு என்றால், தமிழ்நாட்டின்பொருளாதார வளர்ச்சி 9.69 விழுக்காடு; தேசிய சராசரியான 2.06 லட்சம் என்பதை விட தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 3.58 லட்சம் என 1.74 மடங்கு அதிகரிப்பு; தமிழ்நாட்டின் உயர்கல்விச் சேர்க்கை விகிதம் 47 விழுக்காடு; நிலையான வளர்ச்சியில் தமிழ்நாடு இந்தியாவில்இரண்டாவது இடம்; சமூக முன்னேற்றக் குறியீட்டில் தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடம்; வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் வெறும் 1.43 விழுக்காடாகக் குறைவு; ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டம் மூலம் 2.25 கோடி மக்கள் பயன்; இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அரசு மருத்துமனைகளில் அதிகமான படுக்கைகள்; இந்தியாவிலேயே அதிகத் தொழிற்சாலைகள் கொண்ட மாநிலம்; 5.35 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகளைப் பெற்றதில் நாட்டிலேயே இரண்டாவது இடம்; ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிப்பதில் நாட்டிலேயே மூன்றாவது இடம்; சூரிய சக்தியில் நான்காவது இடம், ஸ்டார்ட்–அப் தரவரிசைப் பட்டியலில் அ.தி.மு.க. ஆட்சியில் கடைசி இடத்தில் இருந்த தமிழ்நாடு, 2022–இல் முதலிடம், ஏற்றுமதித் தயார் நிலைக் குறியீட்டில் முதலிடம்; மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் முதன்மை மாநிலம்; தோல் பொருட்கள் மற்றும் ஜவுளி ஏற்றுமதியில் முதன்மை மாநிலம்; நாட்டிலேயே காவல்துறையில் அதிக பெண் அதிகாரிகள் பணிபுரியும் மாநிலம்; அதுமட்டுமல்ல – சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருப்பதில் நாட்டிலேயே முதல் இடத்தில் உள்ள மாநிலம் தமிழ்நாடு என்று திராவிட மாடல் அரசின் மணிமகுடத்தை அலங்கரிக்கும் அடுக்கடுக்கான சாதனைகளால் தமிழ்நாடு இன்றைக்கு முன்னிலையில் இருக்கிறது!

அதுமட்டுமல்ல, மக்களை முன்னேற்றும் முத்திரைத் திட்டங்களான ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ ‘மகளிர் விடியல் பயணத் திட்டம்’ முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’ ‘புதுமைப்பெண் திட்டம்’ ‘தமிழ்ப் புதல்வன் திட்டம்’, ‘நான் முதல்வன் திட்டம்’, ‘அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்’, ‘இல்லம் தேடிக் கல்வி’, ‘மக்களைத் தேடி மருத்துவம்’ என அனைத்துத் திட்டங்களும் – தமிழ்நாட்டின் முன்னேற்ற த்திற்கும் – தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கும் முன்னோடியாகத் திகழ்வதை மற்ற மாநிலங்கள் கூட இன்று திரும்பிப் பார்க்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழக அரசின் இந்தச் சாதனைகளைப் பகுதி, ஒன்றிய, நகர அளவில், இளைஞர் அணியின் மூலம் வரப்பெற்ற 186 இளம் பேச்சாளர்கள் உள்ளிட்ட 443 பேச்சாளர்களின் பங்கேற்புடன், 868 ஒன்றியங்கள் – 224 பகுதிகள் – 152 நகரங்கள் என மொத்தம் 1,244 இடங்களில் ”நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு! சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்களை நடத்திடுவதென மாவட்டக் கழகச் செயலாளர்களின் இந்தக் கூட்டம் முடிவு செய்கிறது.

பவள விழாக் கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு – கழகத்தலைவரின் அறிவுறுத்தலின்பேரில் கூடல்மாநகரில் ஜூன் 1–ஆம் நாள் கூடுகிறது!

நூறாண்டு கடந்த திராவிட இயக்கத்தில், 75 ஆண்டுகளைக் கடந்து தமிழ் மக்களுக்கான சமுதாய – அரசியல் பணிகளைச் சளைக்காமல் மேற்கொண்டு, நாட்டின் அரசியலில் தவிர்க்க முடியாத தேசிய சக்தியாகத் திராவிட முன்னேற்றக் கழகம் திகழ்கிறது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ றிஞர் கலைஞர் ஆகியோர் வழியில் நின்று தமிழ்நாட்டின் நலன் காத்து வருவதுடன் – இன்று அகில இந்திய அரசியலில் நம் கழகத் தலைவரின் கருத்து என்ன என்ற எதிர்பார்ப்பு ஓங்கி நிற்கிறது.

பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மா னங்களை நிறைவேற்றி – தமிழ்நாட்டின் முன்னேற்ற த்திற்காகவும், நம் நாட்டின் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காகவும், சமத்துவம், சமூகநீதி, சிறு பான்மையினர் நலன் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் நலன் காக்கும் மாபெரும் இயக்கமாக முன்வரிசை யில் நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பொதுக்குழுக் கூட்டம் நம் ஒப்பற்ற கழகத் தலைவர் அறிவுறுத்தலின் படி, வருகின்ற ஜூன் 1–ஆம் நாள் கூடல் மாநகராம் மதுரையில் நடை பெறும் என்று இம்மாவட்டக் கழகச் செயலாளர்களின் இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளை அரசியல் பழிவாங்கலுக்குப் பயன்படுத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அதிகார அத்துமீறலுக்குக் கண்டனம்! மக்கள் மன்றத்திலும் – சட்டத்தின் துணை கொண்டும்; தி.மு.க. எதிர்கொள்ளும்!

நீதித்துறை உள்ளிட்ட அனைத்துத் தன்னாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளிலும் அத்துமீறிக் குறுக்கிட்டு – அந்த அமைப்புகளின் சுதந்திரத்தைப் பறித்து வருவதோடு – தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்கள் மட்டுமே வருமான வரித்துறை, அமலாக்கத்துறை ஆகியவற்றின் ரெய்டுக்கும், சோதனைகளுக்கும் இலக்காகும் வகையில் அதிகார அத்துமீறல் செய்து– அறிவிக்கப்படாத நெருக்கடி நிலைமையை உரு வாக்கி வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு இந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

சி.பி.ஐ., அமலாக்கத்துறை, வருமானவரித்துறைபோன்ற நடுநிலை தவறாது செயல்பட வேண்டிய அமைப்புகளை எதிர்க்கட்சிகளுக்கு எதிரான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியுள்ள தன் விளைவாக இன்று உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதி மன்றத்தின் கண்டனத்திற்கு இந்த அமைப்புகளை ஆளாக்கி, அ.தி.மு.க. போன்ற கட்சிகளை மிரட்டி கூட்டணி அமைக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்த அமைப்புகளை ஈடுபடுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் ஒரு அமலாக்கத் துறை அதிகாரி லஞ்சம் பெறும் போது கைது செய்யப்பட்ட நடவடிக்கையை ”பழிவாங்கும் நடவடிக்கை எனக் கூறிய அமலாக்கத் துறையைப் பார்த்து; இப்போது டெல்லி உயர்நீதிமன்றமும், மாண்பமை உச்சநீதிமன்றமும் அந்த அமைப்புகளில் நடக்கும் ஊழல்க ளைக் கண்டித்துக் கொண்டு இருப்பதையும் மாவட்டக் கழகச் செயலாளர்களின் இந்தக் கூட்டம் பதிவு செய்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீது பழிவாங்கும் நடவடிக்கைக்காக அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு பயன்படுத்துவதை திராவிட முன்னேற்றக் கழகம் சட்டத்தின் துணை கொண்டு துணிச்சலுடன் எதிர்கொண்டு, ஏற்கெனவே கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்கள் சொன்னபடி, அமித்ஷா அல்ல; எந்த ஷா வந்தாலும் – அவர்கள் எத்தனை பரிவாரங்களைச் சேர்த்துக் கொண்டு வந்தாலும் அதனை எதிர்த்து, நீதியை நிலை நாட்டிடவும் – மக்கள் மன்றத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அதிகார அத்துமீறலை எடுத்துரைத்திடவும் இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

அரியலூர் மாவட்ட கழக செயலாளர் போக்குவரத்துத் துறையில் சிறப்பாக செயல்பட்டு வரும் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்களுக்கு கூடுதலாக மின்சாரத்துறை அமைச்சராக பொறுப்பு வழங்கிய கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் அரியலூர் மாவட்ட கழகம் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்பிரமணியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் து.அமரமூர்த்தி,

ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, நகர கழக செயலாளர்கள் இரா. முருகே சன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் கழக செயலாளர் ப.கோபால கிருஷ்ணன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள், பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா. அன்பழகன்,ரெ. சக்கரவர்த்தி, ரெங்க.முருகன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில் மாறன், இரா.அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன், நா.கணேசன், பொன். செல்வம், கே.ஜி.எஸ். முருகன், இரா.செந்தில்குமார், பேரூர் கழக செயலாளர் அ.அல்போன்ஸ், அரியலூர் நகர மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், உடையார்பாளையம் பேரூராட்சி தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார், வரதராஜன்பேட்டை பேரூராட்சி தலைவர் மார்கிரேட் அல்போன்ஸ், மாவட்ட அணி அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.இராமராஜன், க.தர்மதுரை, என்.ஆர்.ராமதுரை, தங்க. ராமகிருஷ்ணன், ஆதி. இளங்கோவன், சி.அந்தோணி சாமி, பானுமதி ராஜேந்திரன், எம்.ஜி.ராஜேந்திரன், கே.சி.லூயி கதிரவன், செ.சஞ்சய் குமார், மீனா சாமிநாதன், இரா.ரவிக்குமார், இரா.குலோத்துங்கன், செ. இளஞ்செழியன், வை. முருகானந்தம், க.கருப்பு சாமி, க .செல்வராஜ், மா. ஜெயக்குமார், க.அருண்ராஜ்,க.இளங்கோவன்,, ஜோ.வின்செண்ட் ராஜா மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள், மற்றும் கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இறுதியாக மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன் நன்றி கூறினார்.

---

### கழகத் தலைவர் அறிவிப்பின்படி

## தி.மு.க தென்காசி வடக்கு மாவட்ட கழகம் சார்பில்

# “நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு”

# கழக ஆட்சியின் சாதனை விளக்க தொடர் பொதுக்கூட்டங்கள்!

### மாவட்ட கழக செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ., அறிவிப்பு



தமிழ்நாடு மக்கள் மனம் மகிழ்ந்து பாராட்டுகின்ற வகையில் “எல்லோர்க்கும் எல்லாம்” என்ற திராவிட மாடல் நல்லாட்சி நடத்தி, நாடே பார்த்து வியக்கும் வகையில் 4 ஆண்டுகளில் ஈடில்லா சாதனைகளை படைத்து இந்தியாவின் நம்பர் 1. முதல்வர் என்ற வரலாற்று சரித்திரத்தை படைத்து, நல்லாட்சி நடத்தி வரும் “மக்களின் முதல்வர்” நாம் நாலும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று தமிழ் இனத்திற்காகவும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களுக்காவும் ஆற்றிய அரும் பெரும் சாதனைகளை மக்களுக்கு விளக்கிடும் வகையில்

**2. "நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு" என்ற தலைப்பில் தென்காசி வடக்கு மாவட்டத்தில் மே 08ம் தேதி முதல் மே 12ம் தேதி வரை பொதுக் கூட்டங்களை கீழ்கண்ட ஒன்றிய நகரப் பகுதிகளில் கீழ்க்கண்ட தேதிகளில் கீழே குறிப்பிட்டபடி சிறப்பு பேச்சாளர்களைக்கொண்டு நடத்தப்பட உள்ளது.**

| நாள் | ஒன்றியம்/நகர/பேரூர் | பேச்சாளர் | இடம் |
|---|---|---|---|
| 08.05.2025 | மேலநீலிதநல்லூர் தெற்கு | G.M.பிரவீன் | இலந்தைகுளம் |
| | குருவிகுளம் வடக்கு | சிவகாசி ஜீவா | அத்திபட்டி |
| | வாசுதேவநல்லூர் தெற்கு | R.சுபாஷ்சந்திரபோஸ் | முள்ளிகுளம் |
| 09.05.2025 | சங்கரன்கோவில் நகரம் | சிவகாசி ஜீவா | திருவுடையான்சாலை |
| | குருவிகுளம் கிழக்கு | தே.சௌந்தராஜன் | மைப்பாறை |
| | மேலநீலிதநல்லூர் மேற்கு | மதுரை பாலா | சேர்ந்தமரம் |
| 10.05.2025 | சங்கரன்கோவில் வடக்கு | G.M.பிரவீன் | வடக்குரதவீதி, கரிவலம்வந்தநல்லூர் |
| 11.05.2025 | குருவிகுளம் மேற்கு | மதுரை பாலா & கு.விஜயகுமார் | குலசேகரப்பேரி |
| | சங்கரன்கோவில் தெற்கு | தே.சௌந்தராஜன் | வீரசிகாமணி |
| | புளியங்குடி நகரம் | கம்பம் செல்வேந்தரன் | K.V.K சாமி திடல் TNபுதுக்குடி |
| 12.05.2025 | மேலநீலிதநல்லூர் கிழக்கு | செ.தாமோதரன் | குருக்கள்பட்டி |
| | குருவிகுளம் தெற்கு | G.M.பிரவீன் | கே.புதூர் |
| | வாசுதேவநல்லூர் வடக்கு | தே.சௌந்தராஜன் | ராமநாதபுரம் |

---

### விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான

# திராவிட மாடல் நல்லாட்சியின்

# சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள்

### மாவட்ட கழக பொறுப்பாளர்
### டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிவிப்பு



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட திராவிட மாடல் நல்லாட்சியின் “நாடுபோற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு” சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள் நடத்திட வேண்டுமென்ற அறிவிப்புக்கிணங்க விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் ஒன்றிய, நகரம் வாரியாக கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறும்.

| வ எண் | தேதி | ஒன்றியம் | இடம் | பேச்சாளர் |
|---|---|---|---|---|
| 1 | 08.05.2025 | திருக்கோவிலூர் (கிழக்கு) ஒன்றியம் | ஆவிகொளப்பாக்கம் | கவிஞர் இரா. கபாகாந்தி (ம) மா. குடியரசு |
| 2 | 08.05.2025 | விக்கிரவாண்டி (மேற்கு) ஒன்றியம் | முட்டத்தூர் | கவிஞர் மங்கலம் பிரபாகரன் |
| 3 | 09.05.2025 | திருவெண்ணெய்நல்லூர்(மேற்கு) | மேலமங்கலம் | ஆரணி மாலா |
| 4 | 09.05.2025 | காணை (வடக்கு) | உடையநத்தம் | பொன்னேரி ஜெ. சிவா |
| 5 | 10.05.2025 | மணம்பூண்டி | மணம்பூண்டி | பொன்னேரி ஜெ. சிவா |
| 6 | 10.05.2025 | திருக்கோவிலூர்நகரம் | 5 முனைசந்திப்பு | ஆரணி மாலா |
| 7 | 10.05.2025 | காணை (மத்திய) ஒன்றியம் | அகரம்சித்தாமூர் | கவிஞர் மங்கலம் பிரபாகரன் |
| 8 | 11.05.2025 | முகையூர் (வடக்கு) | பில்ராம்பட்டு | வண்ணை புகாரி (ம) எ. கீர்த்தனா |
| 9 | 11.05.2025 | விக்கிரவாண்டி (கிழக்கு) | வெட்டுக்காடு | கவிஞர் மங்கலம் பிரபாகரன் (ம) த. இன்பக்குமரன் |
| 10 | 11.05.2025 | காணை (தெற்கு) | மல்லிகைப்பட்டு | பம்மல் மு.ஏ. முகமது இல்ரகீம் (ம) அப்தூல் வஹாப் |
| 11 | 12.05.2025 | முகையூர் (தெற்கு) | முகையூர் | கவிஞர் இரா. கபா காந்தி |
| 12 | 12.05.2025 | விக்கிரவாண்டி (மத்திய) | ஒரத்தூர் | ஆரணி மாலா |

இந்த சாதனை விளக்கப் பொதுகூட்டங்களில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர். முன்னாள் அமைச்சர், முனைவர். க.பொன்முடி அவர்களும், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர். திரு. அன்னியூர் சிவா அவர்களும், மாவட்ட கழக அவைத்தலைவர் திரு. ம.ஜெயச்சந்திரன் அவர்களும் கலந்துகொள்ள உள்ளார்கள். எனவே மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் **பொன்.கௌதமசிகாமணி**
மாவட்ட கழக பொறுப்பாளர்
விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க.